தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **23-3-2017**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பழங்குடி உழவர்களுக்கு நூற்புழு மேலாண்மைப் பயிற்சி

அகில இந்திய ஒருங்கிணைந்த நூற்புழு ஆய்வுத்திட்டத்தின் கீழ் கோவை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக நூற்புழு துறை சார்பாக கோவை, நரசீபுரம், பச்சான் வயல், புதுபதி பழங்குடியின உழவர்களுக்கு பயிர்களைப் பாதிக்கும் நூற்புழு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சி முகாமிற்கு அகில இந்திய நூற்புழு ஆய்வுத்திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் இராமன் குமார் வாலியா அவர்கள் தலைமை தாங்கி பயிர்களைப் பாதிக்கும் நூற்புழுக்களின் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் கூறினார்.

பயிர்களைப் பாதிக்கும் நூற்புழுக்களால் ஏற்படும் அறிகுறிகள், நூற்புழுக்களை கட்டுப்படுத்த உயிரியல் நூற்புழுக் கொல்லிகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று நூற்புழு விஞ்ஞானிகளான முனைவர். கி. பூர்ணிமா, முனைவர். ப. கலையரசன் மற்றும் நா. சுவர்ணகுமாரி ஆகியயோர் விளக்கினர்.

இப்பயிற்சியில் பங்குபெற்ற பழங்குடியின உழவர்களுக்கு வேளாண் இடுபொருட்கள் மற்றும் பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டன.

மக்கள் தொடர்பு அலுவலர்